# விழுப்புரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திருமதி.கோ.கிருஷ்ணப்பிரியா, B.Sc., MA., B.Ed., M.Phil.,

ந.க.எண். 8700 / அ3/2022, நாள்– 29.12.2022

பொருள்– பள்ளிக் கல்வித்துறை – பொதுப் பணிகள் – கருணை அடிப்படையில் நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.பி.லோகநாதன் , பதிவுரு எழுத்தர் , வட்டாரக்கல்வி அலுவலகம் , செஞ்சி என்பவரின் வாரிசுதாரர் திரு.லோ.புருஷோத்தமன், இளநிலை உதவியாளர் , அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்சேவூர் – இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை– 1)திண்டிவனம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 4902/அ1/2015 நாள் 05.06.2017

2) அரசாணை (நிலை) எண்.48 / தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்– 26.02.2021.

3)சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,ந.க.எண்.21925/ஜே/இ4/2021,நாள்09.04.2021

4) திண்டிவனம் , மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண். 4902/அ1/2015 நாள் 30.08.2022

******************

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் கல்வி மாவட்டம் , செஞ்சி வட்டாரக்கல்வி அலுவலகத்தில் பதிவுரு எழுத்தராக பணிபுரிந்து பணிக்காலத்தில் 25.12.2006 அன்று காலமான திரு. பி.லோகநாதன் என்பவரின் வாரிசுதாரர் திரு.லோ.புருஷோத்தமன் என்பவருக்கு பார்வை 01–ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 06.06.2017 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 02–ல் காணும் அரசாணை பத்தி 5.1 மற்றும் 5.2–இல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு ( Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன் முறைப்படுத்தப்படுகிறது.

Scanned by CamScanner

(5.2) மேலே பத்தி 5.1-இல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் ( one level higher than the appointing authority), அவரவர் கட்டுபாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறைசெய்திட, உரிய செயல்முறைஆணை ( Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர்.

எனவே, தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை 02-ல் காணும் அரசாணையின்படியும் பார்வை 04-ல் காணும் கடிதத்தில் நியமன அலுவலரின் பரிந்துரையின் பேரில் திரு.லோ.புருஷோத்தமன் , இளநிலை உதவியாளர் , அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்சேவூர் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 06.06.2017 முற்பகல் முதல் வரன் முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படி திரு.லோ.புருஷோத்தமன் , இளநிலை உதவியாளர் , அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்சேவூர் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார். தகுதிக்காண் பருவக்காலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
விழுப்புரம்.

பெறுநர்- சார்ந்த பணியாளர் ( உரிய வழியாக)

நகல்- மாவட்டக் கல்வி அலுவலர் , திண்டிவனம்

Scanned by CamScanner